# ஆனையிறவுப் படையினருக்கான விநியோகம் புலிகளால் தாக்கப்படுவது சாத்தியம் பி. பி. ஸி, தகவல்

ஆனையிறவு இராணுவ முகாமினுள் படையினர் நுழைந்துள்ள போதிலும் வெற்றிலைக்கேணி — ஆனையிறவுப் படையினருக்கான விநியோகப் பாதை புலிகளின் தாக்குதலுக்குள்ளாகலாம் என பி. பி. ஸி. நேற்றுக் குறிப்பிட்டது. விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் முகாம் பகுதியில் நிலைகொண்டு தாக்குதல் நடாத்துவதை அது சுட்டிக்காட்டியது. ஆனையிறவு மோதல் முடிவடையவில்லை எனவும் படையினருக்கான விநியோகம் துண்டிக்கப்பட விடுதலைப் புலிகள் முயற்சிப்பர் எனவும் புலிகளின் பேச்சாளர் குறிப்பிட்டதாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. முகாம் பகுதியில் புலிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடாத்துவதாகவும் புலிகள் தாக்குதல் நின்றுவிட்டதாக முன்னர் கூறியமை அவசரத்தில் தெரிவிக்கப்பட்டது என இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனராம். இதேவேளை இராணுவத்தினர் ஆட்பலத்தினால் ஆனையிறவை தப்பவைத்துக்கொண்டாலும் அதைத் தொடர்ந்தும் தமது பிடியில் வைத்திருக்க —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 251 பிரசோற்பத்தி ஆடி 21 ( 06 - 08 - 1991 ) செவ்வாய்

# ஆனையிறவு தடைமுகாமைச் சூழ தொடர்ந்து உக்கிரமான போர்

## குறிஞ்சாத்தீவில் பவள்கள் நாசமாகின புல்லாவெளியில் சில காவலரண்கள் அழிப்பு

குறிஞ்சாத்தீவு, புல்லாவெளி, ஆனையிறவு பகுதிகளில் தொடர்ந்தும் படைகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் உக்கிரத் தாக்குதலைத் தொடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினமும், நேற்றும் புலிகள் இப்பகுதிகளில் நடாத்திய அதிரடித் தாக்குதல்களில் படையினரின் சில காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இரண்டு பவள் கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்தும் இப்பகுதியில் கடும் விமானத் தாக்குதலின் மத்தியில் புலிகள் சளைக்காது நேரடித் தாக்குதலை நடாத்தி வருவதாகத் தெரிகிறது

இதேவேளைநேற்றுக்காலை 4.45 மணியளவில் புல்லாவெளிச் சந்திப் பகுதியினுள் நுழைந்த புலிகள் அங்கு தொடராக அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண்கள் மீது திடீர்த் தாக்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

## காயமடைந்த படையினர் பலாலி சென்றனராம்

ஆனையிறவு முகாமினுள் காயமடைந்த 53 இராணுவத்தினரும் அவசர சிகிச்சையின் பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

இதேவேளை ஆனையிறவு முகாமின் முக்கியத்துவம் — 04 ஆம் பக்கம் பார்க்க

## மோதல்கள் தொடரும் என்கிறார் ரணதுங்க!

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று நடைபெற்ற மோதலில் ஒரு சிப்பாய் பலியானதாகவும், 38 சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை இராணுவம் யாழ் குடா நாட்டிலும் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் எனப் பாதுகாப்பு — 04 ஆம் பக்கம் பார்க்க

## வல்வையில் கடற்படை மீது புலிகள் தாக்குதல்

நேற்றுக்காலை10. 30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற இரு கடற்படைக் கப்பல்கள் வல்வைப் பகுதியை அண்மித்து வந்தன.

இக்கப்பல்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தவே படையினரும் கப்பலிலிருந்து பீரங்கித் தாக்குதலை மேற்கொண்ட பின் மீண்டும் திரும்பிச்சென்றுவிட்டனர். 09

## இன்பனுக்கு அஞ்சலி

ஆனையிறவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலின் போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போராளியான இன்பனின் (நடராசா ரஞ்சித்குமார் கச்சாய் வீதி, சாவகச்சேரி) புகழுடல் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் — 04 ஆம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினியில் ஆனையிறவு

ஆனையிறவு முகாம் நோக்கி வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து வந்த படையினர் முகாமினுள் செல்வதை நேற்று ரூபவாஹினி ஒளிபரப்பியது.

பெரும் தொகையான படையினர் கவசவாகனங்கள், கனரக வாகனங்கள் சகிதம் தடைமுகாம் பகுதியூடாகச் சென்றமை காட்டப்பட்டது.

## இலங்கைத் தமிழரைப் பதிய கர்நாடக அரசு முயற்சி

கர்நாடக மாநிலத்தில் உள்ள இலங்கைத் தமிழ் மக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி கண்காணிக்க கர்நாடக அரசு ஆலோசித்துள்ளதாக முதலமைச்சர் பங்காரப்பா தெரிவித்தார்.

தமிழகத்தில் நடைமுறையில் உள்ளவாறு இம்மாநிலத்தில் உள்ள இலங்கையரையும் பதிவு செய்ய கர்நாடக அரசு முயற்சிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு காரணங்களால்

## ஜெயலலிதாவின் இல்லத்துக்கு அருகில் குடிசைகள் அழிப்பு

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் இல்லம் அமைந்துள்ள சென்னை போயஸ் காடனில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் இல்லத்திற்கு அருகில் உள்ள குடிசைகள் அனைத்தும் அகற்றப்பட்டன.

புல்டோசர் மூலம் இந்தக் குடிசைகள் இடித்துத் தள் — 04 ஆம் பக்கம் பார்க்க

## சில ஐ.தே.க.எம் பிக்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

சில ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்கள் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிராகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கட்சித் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளது.

முன்னாள் நிதியமைச்சரும் புத்தளம் எம். பியுமான நைனர் மரிக்கார் உட்பட மூவர் கடந்த உள்ளூராட்சிச் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பிரான்ஸில்இலங்கை பெண் அழுது புலம்பித் தஞ்சம்!

பிரான்ஸில் இலங்கைப்பெண் ஒருவர் அழுது புலம்பி அங்கு அடைக்கலம் பெற்றுள்ளார்.

இப்பெண் விமானம் ஒன்றின் மூலம் எவ்வித ஆவணமுமின்றி பிரான்ஸில் உள்ள சார்ள்ஸ் டிகோல் விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

இதனால் இவரை உடனடியாகப் பிடித்து விமானத்தில் ஏற்றி நாடு கடத்த பிரெஞ் அதிகாரிகள் முயன்றனர்.

அப்பெண் தன்னைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என அழுது சத்தமிட்டு விமான — 04 ஆம் பக்கம் பார்க்க

# பெரும் பொருள் மற்றும் உயிர் இழப்பை ஒப்பரேஷன் பலவேகய சந்தித்துள்ளது

ஆனையிறவு முகாம் நோக்கி எடுக்கப்பட்ட ''ஒப்பரேஷன் பலவேகயவுக்கு'' பெரும் ராணுவச் செலவும், உயிர் இழப்பும் ஸ்ரீலங்கா பாதுகாப்புத்துறைக்கு ஏற்பட்டுள்ளது. இத்தகவலை வெளியிட்ட பி. பி. ஸி. செய்தியாளர் யஸ்வந்தர் சிங், படையினர் 9 இலோ மீற்றரைக் கடந்து வருவதற்காக இப் பெரும் பொருள் மற்றும் உயிர் இழப்புக்களை சந்திக்க வேண்டியிருந்தது எனச் சுட்டிக்காட்டினார். இதேவேளை ஆனையிறவில் படையினர் பலத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என கொழும்பில் இராணுவ உயர் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் பி.பி.ஸி குறிப்பிட்டது.

## நாவலின் உதவியை நாடும் சி. பி. ஐ. அதிகாரி கார்த்திகேயன்

ராஜீவ் கொலை தொடர்பாக இந்தியப் பத்திரிகைகள் தொடர்ந்து பல தகவல்களை வெளியிட்டு வருகின்றன. அவற்றில் சில இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

''ஒற்றைக்கண் சிவராசனை இங்கே பார்த்தேன்... அங்கே பார்த்தேன்...'' என்று யார் டெலிபோன் செய்தாலும் மின்னல் வேகத்தில் சி. பி,ஐ, அதிகாரிகள் பிரவேசித்து அதிரடித் தேடுதல் செய்கிறார்கள் கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்குப் பத்துப்பதினைந்து இடங்களில் இது மாதிரிச் சோதனைகள் நடக்கின்றன.

★ ★ ★

சிவராசன் நல்ல படிப்பாளி. பாலஸதீனிய விடுதலை இயக்கத்திடம் அதிரடிப் பயிற்சி பெற்றவன். அதனால்த் தான் சிவராசனை நெருங்கவே முடியவில்லை.

★ ★ ★

சிவராசனுடன் தேடப்படும் சுபா மன்னார்ப் பகுதியைச் சேர்ந்தவர் சுபாவுக்கு இரண்டு சகோதரிகள் இந்தச் சகோதரிகள் இருவரும் இந்திய அமைதிப்படையால் கெடுக்கப்பட்டனர் என ஒரு தகவல்.

★ ★ ★

சி.பி.ஐ.இன் சென்னை அலுவலகமான 'மல்லிகை' தாக்கப்படுமென பல்வேறு மிரட்டல்கள் வந்துள்ளன. இதனால் அங்கு தற்போது 130 பேர் அடங்கிய விசேட படையினர் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் பலத்த பாதுகாப்புக் காரணமாக 'மல்லிகை'க்குத் தகவல் கொடுக்க வர மக்கள் தயங்குவதாகவும் சி,பி ஐ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

★ ★ ★

நளினி முருகன் ஆகிய இரு சந்தேகநபர்களைப் பிடிக்க உதவிய இரு பொலிஸாருக்கு 1,75,000 ரூபாய் சன்மானமாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த இரு பொலிஸாரினதும் பாதுகாப்புக்கருதி அவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

★ ★ ★

தற்போது கைதாகி சி. பி ஐ. விசாரணையில் இருக்கும் முருகனை 'மொட்டைத் தலையன்' என்று சி. பி. ஐ. அதிகாரிகள் அழைக்கின்றனர். சிவராசனை நீங்கள் பிடித்து விட்டால் உங்கள் எல்லோருக்கும் நான் பூமாலை போடுகிறேன் என்று 'மல்லிகை'யில் காவல் வைக்கப்பட்டுள்ள முருகன் சி. பி ஐ அதிகாரிகளுக்கு சவால் விடுகின்றாராம்.

★ ★ ★

ராஜீவ்காந்தி கொலை விடயத்தில் முக்கியமான சில தகவல்களைப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு இலங்கைப் பிரமுகர் ஒருவரே கொடுத்து உதவுகிறாராம்.

★ ★ ★

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை விசேட சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகிறது. 'டடா' (TADA) என்று சுருக்கமாகக் கூறப்படும் இந்தப் பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டம் இதுவரை பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் தான் பயன்படுத்தப்பட்டது. தற்போது ராஜீவ் கொலையையடுத்துத் தமிழ்நாட்டுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒத்ததாகப் பல விசேட அதிகாரங்களை இச் சட்டம் பொலிஸாருக்கு வழங்குகிறது.

★ ★ ★

ராஜீவ் கொலைபற்றி விசாரிக்கும் சி. பி. ஐ. குழுவின் தலைவர் கார்த்திகேயன் (இவர் தமிழர் அல்ல பிரபல நாவலாசிரியர் ஃப்ரெட்ரிக் ஃபோர்ஸித் எழுதிய' திநெகோஷியேட்டர்' என்ற நாவலை வெகு ஆர்வமாகப் படித்து வருகிறாராம். தற்கொலைப் படைத்தாக்குதல், மற்றும் பெல்ட் வெடிகுண்டுகள் பற்றிய விவரங்களெல்லாம் அந்த நாவலில் நிறைய உண்டாம். அந்த நாவலை வைத்தே இக்கொலைத் திட்டம் தீட்டப்பட்டிருக்கலாமெனதிரும்ப, திரும்பப் படிக்கிறாராம் கார்த்திகேயன் 16

### சந்நிதி உற்சவம்

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

15 நாள்கள் உற்சவத்தையடுத்து 24 ஆம் திகதி தேர் உற்சவம் இடம் பெறும் 08


UNIVERSITY OF JAFFNA

Repeat examination-Certificate course in Data Processing and BASIC Language Programming.

The above examination will be conducted in November 1991. The eligible repeat candidates are requested to complete and submit the examination entry forms to the Examination branch, University of Jaffna. before 15 th September 1991.

Those who are applying for the DPBL 22 paper (Project Work) are requested to meet the Head/Computer Unit on or before 31st August 1991 to discuss about the arrangements for project work. The exact dates of the examination will be notified later.

Registrar
University of Jaffna.

08038



## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

விளக்கெரிக்க, பயிர் பீடை பூச்சி அகற்ற. மருத்துவ பாவனைக்குச் சுத்தமான வேப்பெண்ணெய் போத்தல் ரூபா 90/- மில்க்வைற், 08034

**சேவை**

தமிழ் - ஆங்கில மொழி பெயர்ப்பும், ஆங்கிலத் தட்டெழுத்து, கடிதம், ஆவணங்கள் முதலியன துரிதகெதியில் செய்து கொடுக்கப்படும்.ந.சோமசுந்தரம் 36, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (பிரதாபன் வீதி) 08011


★ 'இந்து' தெரிவிக்கும் தகவல் இது

புலிகளுக்குள்ள பரந்தளவு ஆதரவினால்

# சி. பி. ஐ. அதிகாரிகள் தடுமாற்றம்!

தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளுக்கு பெருமளவில் ஆதரவு இருப்பது விசாரணைகள் மூலம் தற்பொழுது தெரியவந்துள்ளதாக இந்தியாவின் பிரபலமான 'இந்து' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலையை விசாரணை செய்துவரும் சி. பி. ஐ அதிகாரிகள் மாநிலத்தில் புலிகளுக்கு இருக்கும் பரந்த அளவிலான தொடர்புகளைக் கண்டு தடுமாற்றம் அடைந்திருப்பதாகவும் 'இந்து' மேலும் எழுதியுள்ளது.

## 'பொங்கும் கடலும் பொழியும் நிலவும் மாவீரர் கதை சொல்லும்'

ஆனையிறவு இராணுவ தடைமுகாம், குறிஞ்சாத்தீவு உப்பள விடுதி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் 16 07. 91 முதல் 30. 07. 91 வரை இடம்பெற்ற மோதல்களில் வீரமரணமடைந்த போராளிகளின் விவரங்கள் விடுதலைப்புலிகளினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆனையிறவு இராணுவத் தடைமுகாமின் குறிஞ்சாதீவு உப்பள விடுதிகள் பகுதி மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் வீரமரணமடைந்தோர் விவரம் வருமாறு:-

மதனா (சிவமலர் தளையசிங்கம் - நுணாவில், சாவகச்சேரி), கார்த்திகா (ரமணி ராசரட்ணம் - இல 16, சென்யோரியஸ் வீதி, நாவாந்துறை வடக்கு), பிரதீபா (ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு), மெடோனா (செல்வராணி மாயழகன் - பல்வராயன் கட்டு, பூநகரி), அன்பினி (விஜிதா சிவனடி - மண்டான், கரணவாய் , வதனி (பென்சி பத்திநாதன் -மன்னார்), சகிலா (ரஞ்சனி நடராசா - தொல்புரம்மத்தி, சுழிபுரம்), தவமணி புஷ்பலதா நடராசா - மொத்தளை, கரவெட்டி கிழக்கு), யசீர்மா (சிவலோசினி சிவானந்தம் ஐயர் - அல்வாய் மேற்கு, சிங்கம் சடையாண்டி ஒழுங்கை), பட்லியா (வரலட்சுமி தேவசிங்கம் - வல்வெட்டித்துறை).

நெல்சா (சரோஜாதேவி சின்னக்குட்டி - கச்சாய் தெற்கு, கொடிகாமம்), யாழ்மொழி (விஜயலதா பாக்கியநாதர் - பேயிட்டி, இளவாலை), சுனித்தா (உஷா கருணாகரன் - குச்சவெளி, திருமலை, 6 -ம் வாய்க்கால்), ஜஸ்மின் (செல்வமலர் கோபால் - பன்குளம் திருமலை), சுந்தரி ரஜிதா தேவநாயகம் - நிலாவெளி, திருமலை). இளவரசி (சந்திரபவானி சிவப்பிரகாசம் - கொக்குத்தொடுவாய், மணல் 6- ம் வட்டாரம்)' மட்டி (செபஸ்ரியம்மா அலோசியஸ் - வங்காலை, மன்னார், ரெட்பானா), காயத்திரி (உமாதேவி சந்திரசேகரம் - விசுவமடு, முல்லைத்தீவு, 1- ம் குறிச்சி), நிசா (சுமதி சதாசிவம் - தம்புவில், அம்பாறை), காண்டீபனி (சுகந்தினி வேலாயுதம் - கண்டாவளை, கிளிநொச்சி. செக்கட்டிப்புலம்).

சுந்தினி (யோகா கணபதிப்பிள்ளை - பம்பைமடு, வவுனியா), சரா (சின்னத்துரை ஜீவராசா - G P S. றோட், கல்வியங்காடு), குகதாஸ் (இராசரத்தினம் ராசசேந்திரன் - உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்), ரகீம் ஐசாக்றொனாட் வீரபாகு - அளவெட்டி தெற்கு, அளவெட்டி), நிதி (இரத்தினம் இளங்கேஸ்வரன் பாபு - கச்சாய், கொடிகாமம்), கீர்த்தி (வீரப்பா பிள்ளை கணேஸ்வரன் - வரணிவடக்கு, வரணி), திசைவீரன் (சற்குருநாதன் சற்குணநேசன்- கச்சாய் வீதி, கொடிகாமம்), சரத்பாபு, அல்பேட் (கந்தசாமி வன்னியசிங்கம் - மட்டுவில் வடக்கு, மட்டுவில்), சகீம் (ரகீம்) (நாகலிங்கம் ஜெகதாஸ் - உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்)·

மெராஜி (அரசரட்ணம் அரவிந்தன் - சேனையூர், கட்டைப்பறிச்சான், மூதூர் ஈச்சிலம்பத்தை), சுஜன் (கோபாலபிள்ளை புஷ்பராசா - 52 ·ம் கட்டை, மூதூர், ஆலம்கேணி), நிருபன் வேலாயுதம் பாலச்சந்திரன் - 1· ம் வாட், கிண்ணியா சென் அன்ரனிலேன்), கேசியன் (பரஞ்சோதிநாதன் நியூட்டன் - பிரான்சிஸ்,பண்டத்தரிப்பு, பள்ளங்கோட்டை), பிருந்தன் சின்னராசா ஜெராம் திலகர் நானாட்டான், மன்னார்), ஆனந்தன் (கந்தசாமித்துரை ராஜவேல் - வேம்படி, வல்வெட்டித்துறை, கில்லியடி), கில்பேட் (ஞானராசா ஞானதீரன் - இலுப்பக்கடவை, மன்னார்), வாணன் (நடேசன் ஜெயக்குமார் - சமாதியடி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய், பேச்சியம்மன் கோவிலடி), வர்மன் (பாஸ்கரமூர்த்தி (சுந்தரமூர்த்தி - வாழைச்சேனை), சபா (மாரிமுத்து பத்மநாதன் - CRA பாம்), - சபா பள்ளக்கால், குண்டகசாலை),

மயில்வாகனம் சின்னத்தம்பி சுந்தரலிங்கம் - பழையதோட்டம், V. V. T குருமன்வெளி) ஜெயந்திரன் (கந்தப்பர் தவராசா - களுவாஞ்சிக்குடி, மட்டுநகர்), பாரதி (நவரட்ணம் கோபாலபிள்ளை - செட்டிபாளையம், மட்டுநகர், ஆறுமுகத்தான் குடியிருப்பு) நளினன் (நாகராசா சிவக்குமார் தவர்ணாமூனை, மட்டுநகர்; பதுளைறோட், பெரியபுல்லுமலை ஏற்றம்),, வரதன் (மாசிலாமணி மகேந்திரன் - மட்டக்களப்பு 120 - 3-ம் குறிச்சி, 7- ம் வட்டாரம்), ஆனந்தகுமார்பாபு தங்கராசா நடராசா - துறைநிலாவணை, மட்டுநகர்), நிதி (செல்வநைனார் சுந்தரராஜன் - 6- ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருமலை). புருஷ்லி சீவரட்ணம் சின்னவன்- சித்தாண்டி, தாழையடி றோட், மட்டக்களப்பு), கரன் (வேலாயுதம் சிவனையர் -கங்குவேலி, தெலிவத்தை, திருமலை).

சிவம் பவான்) (திருப்பரங்கதிர்நாதன் நெல்லைநாதன் - இமையாணன் உடுப்பிட்டி), உமாசங்கர் (ரவி) (சின்னமணி சென்சியஸ் - 8/3 ரெக்ளெமேசன், குருநகர்), திகில் (தங்கையா சேரன் - D7 கிளிநொச்சி), நிமலேந்திரன் (பிரசன்னா), (தங்கவேல் செந்தில்குமரன் - நடராசா வீதி, VVT) கந்தன் (டானியல் ராஜ்குமார் - சற்கோட்டை அல்வாய்), வேலுப்பிள்ளை (யூனியன் கந்தையா கந்தசாமி . சாவகச்சேரி), சத்தியகுமார் (பொன்னையா சிவனேசராசா - திருப்பழுகாமம்,மட்டக்களப்பு ),கிர்மானி (ஜோன் எட்வேட் கெனடி - 34/1மவுண்கா மர்வீதி குருநகர்), பவா (கதிரித்தம்பி கணேசலிங்கம் நல்லூர் பூநகரி அரசடிலேன்), அன்பு (பாலச்சந்திரன் ரமணன் - தும்பளை, பருத்தித்துறை.

அல்பேட் (நடராசா கலைச்செல்வம் - கலைவாணி வீதி, தையிட்டி, K. K. S பலாலி), பீலிக்ஸ் (அருளானந்தம் றெனால்பானத் - கொண்சுவாசர், தொடுவை). சத்தியராச் கந்தையா சத்தியசீலன் - கோபாலபுரம் நிலாவெளி திருமலை), சொனி (சிவானந்தசுந்தரம் அசோகன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), வினோத் (தர்மலிங்கம் தயாளன் - ஆண்டித் தோட்டம், அல்வாய்), ராகவன் (குமாமரசாமி குணராசா - கேணியடி, கொக்குவில் மேற்கு) வதனன் (சுப்பிரமணியம் கேதீஸ்வரன் - தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை).

16 07. 91 முதல் 30. 7. 91 வரை ஆனையிறவு இராணுவத்தளம் மீதான முற்றுகைப் போரிலும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினருடனும் நடந்த மோதலில் வீரமரணமடைந்தோர் விவரம் வருமாறு-

குமரப்பா (பாலசுப்பிரமணியம் சிவபாலன் - தெல்லிப்பளை பன்னாலை), சுகந்தன் (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன் - சபாபதிப்பிள்ளை வீதி, ஆச்சிரமத்தடி, சுன்னாகம்), ஸ்ரீரங்கன் (யோகதாஸ் நேசராசா - துன்னாலை வடக்கு, துன்னாலை), மௌலி (தாமோதரம்பிள்ளை மணிவாசன் - கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), புஷபன் (நாகராசா புலேந்திரன் -நாவற்குழி தெற்கு, கைதடி), வினோத் (மோகனதாஸ் சுரேஷ் நிரஞ்சன் - கோளிப்புலம் ஒழுங்கை, மயிலிட்டி), யசோ (யோகேஸ்வரன் சுதாகர் - மானிப்பாய்வீதி, ஒட்டுமடம்), அனுசன் (தேவசகாயம் குணம் டேவிட்றோட், குருநகர்), சங்கர் (வடிவேல் ஜெயந்திரன் - நாவற்குழிசந்தி, நாவற்குழி), பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ணகுமார் - சங்கானை மேற்கு, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), அறிவொளி (ஸ்ரீபத்மநாதன் சத்தியசீலன் விதானையார்வீதி, சுண்டுக்குழி). இளஞ்செழியன் (யோகேஸ்வரன் அரவிந்தன் - மயிலதனை மேற்கு, வல்வெட்டித்துறை. மத்தலோடை), பட்சன் (சீனியர் உதயராசா - புன்னாலைக் கட்டுவன் தெற்கு, கோராணபுரம்), சிவா (இராசப்பு அன்ரனி அமரநேசன் - நிலாவெளி, திருமலை).

டயஸ் (நாகமுத்து பசேங்கர் - மோகன் வீதி, அச்செழு, நீர்வேலி), சுருளி (சிவகுரு அம்பன் - மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி), வினித்தா (தியாகராசா இலங்கேஸ்வரி -புலோலி தெற்கு, புலோலி), சிவசங்கர் (யோசப் ஜெயமணி - கோதண்டர் நொச்சிக்குளம், வவுனியா விசயன் (வேலுப்பிள்ளை மாரிமுத்து - சீனிவாசகம்வீதி, கொட்டடி), நகுலேஸ்வரன் (சிங்கார வடிவேல் தவக்குமார் - நெற்காடு ஒழுங்கை, ஊரிக்காடு வல்வெட்டித்துறை), கைலன் (அரியரட்ணம் ஜசந்தன் - சிவயதம், வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை 9 ஆம் வட்டாரம்), நிசாந்தன் (அருளானந்தம் வூட் அன்ரனி - நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு) மணிவாசன் (கணேசநாதன் ஜனார்த்தனன் - கௌரிவாசம், இணுவில்).

- வளரும் -

## கூட்டுப்படைத் தலைமையக இராணுவ அதிகாரி கட்டுநாயக்காவில் கைது! சிங்கப்பூரிலிருந்து காதலியுடன் தங்கம் கடத்தி வந்தாராம்

இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் பெருமளவு கடத்தல் பொருள்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துகைது செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையலுவலகத்தில் பணி புரியும் இந்த இராணுவ அதிகாரி தனது காதலியுடன் சிங்கப்பூரிலிருந்து கொழும்பு திரும்பிய போதே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் இவரைப் பிடித்தனர்.

இந்த இராணுவ அதிகாரி கொண்டுவந்த 3 சூட்கேஸ்களின் அடியில் இருந்து 80 லட்சம் ரூபா பெறுமதியான 80 தங்கப் பாளங்களும், 3000 தங்க முலாம் பூசப்பட்ட கைக்கடிகாரங்களும் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டன.

இவரை வரவேற்க விமான நிலையத்துக்கு இராணுவத்தினருடன் வந்திருந்த மற்றொரு இராணுவ உயரதிகாரி ஒருவர் சந்தேக நபர் பிடிபட்ட செய்தியைக் கேட்டதும் மயங்கி விழுந்ததாகவும், மற்றைய இராணுவ அதிகாரிகள் விமான நிலையத்தை விட்டு நழுவி விட்ட தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன, 'எமிரேட் எயர் வேஸ்' விமான மூலமே இவர் நாடு திரும்பியிருந்தாராம். 08

## யாழ் வைத்தியசாலை ஊழியர்கள் அடையாள அட்டை அணியப் பணிப்பு

யாழ் வைத்தியசாலையில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தனியார் துறையைச்சேர்ந்தபாதுகாப்புஉத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் சகல வைத்தியா சாலை ஊழியர்களையும் அடையாள அட்டைகளை அணிந்து கடமைக்கு வருமாறு நிர்வாகம் பணித்துள்ளது.

அடையாள அட்டை இல்லாதவர்கள் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு வைத்திய சாலை படிவ அறையில் அடையாள அட்டைக்கான அத்தாட்சிப் படத்தை எடுக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். 03

## சங்கக் கிளையில் திருட்டு

ஈச்சமோட்டையில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு மேற்படி சங்கக்கடையின் கூரையூடாக உள்ளே புகுந்த திருடர்கள் 120 லக்ஸ்பிறே பக்கெட்டுக்களையும் மற்றும் சில பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர். 16

## ★ சி. பி. ஐ அதிகாரிகள் தெரிவித்ததாக 'ஜூனியர் விகடன்' தகவல்

# புலிகளின் நுண் அறிவை மதிப்பிட தனி விசாரணைக்குழு தேவை!

விடுதலைப்புலிகளின் திறமையான செயற்பாடு இந்திய மத்திய புலனாய்வுக்குழுவைப் பெரும் வியப்பிலாழ்த்தியுள்ளதாக சி பி. ஐ. அதிகாரிகளை மேற்கோள்காட்டி தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'ஜூனியர் விகடன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நுண்ணறிவுத் திறமையை ஆய்வு செய்வதற்கென்று தனியான ஒரு புலனாய்வுக் குழு அமைக்கப்படல் வேண்டுமென சி. பி. ஐ. அதிகாரிகள் தமது தலைமையைக் கோரியுள்ளதாகவும் 'ஜூனியர் விகடன்' தெரிவித்துள்ளது.

'சிப்பான வெடிமருந்துகளைப் பயன்படுத்தி அதிசக்தி வாய்ந்த குண்டுகளைத் தயாரிக்கும் திறமை புலிகளுக்கு உண்டு' என சி. பி. ஐ. அதிகாரி ஒருவர் தெரிவித்தார் எனவும் அச் சஞ்சிகை மேலும் எழுதியுள்ளது. 14

## 16 வட. கிழக்கு ஆசிரியர்களுக்கு மாவட்ட இடமாற்றம்

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு 16 ஆசிரியர்களுக்கு மாவட்ட இடமாற்றங்களை வழங்கியுள்ளது.

இது தொடர்பான 25.7.91 ஆம் திகதி இடப்பட்ட இடமாற்றப்பட்டியல் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

இப்பட்டியலின்படி யாழ் மாவட்டத்திற்கு பிற மாவட்டங்களிலிருந்து 13 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மூவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

## உவர்மலையில்வசிக்கும் தமிழர்களை பொலிஸில் பதியப் புதிய உத்தரவு

திருமலை உவர்மலையில் வசிக்கும் தமிழர் அனைவரும் தங்களது குடும்ப உறுப்பினர்கள் அடங்கிய விவரப்பட்டியலை 15 ஆம் திகதிக்கிடையில்திருமலைப்பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

ஒலிபெருக்கி வாயிலாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக விருந்தினர் எவராவது வீட்டில் தங்குவதற்கு வந்தால் அதுபற்றித் தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனப் பொலிஸார் பணித்துள்ளனர். 08

## கொழும்பில் திரைப்பட விழா

தெற்காசிய விவரணத் திரைப்பட விழா இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

## சிம்பாப்வே பஸ் விபத்தில் 86 பாடசாலைச் சிறுவர் பலி!

சிம்பாப்வேயில் நிகழ்ந்த பயங்கர பஸ் விபத்தில் 86 பாடசாலைச்சிறுவர்கள் ஸ்தலத்திலேயே மரணமானார்கள்.

பாடசாலை விளையாட்டுப் போட்டியொன்றில் பங்குபற்றி விட்டுத் திரும்புகையிலேயே இக் கோர விபத்து நடந்தது.

இந்த பஸ்ஸில் 98ச் சிறுவர்கள் பயணம் செய்ததாகவும் 12 பேர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன.

## அவசர அழைப்பு

யாழ் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு மிக அவசரமாக இரத்தம் தேவைப்படுவதால் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த பின்வரும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு இரத்தவங்கி அறிவித்துள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, வள்ளுவர் சனசமூக நிலையம்வண்ணார்பண்ணை, சிவகாளியம்மாள் சனசமூக நிலையம் மானிப்பாய், பரமானந்த வாசிகசாலை இணுவில், மத்தியகிராம முன்னேற்றச் சங்கம் கோண்டாவில் ஆகியோரையே உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. 03, 04

## தமிழ் வாலிபர்கள் கடத்தல் நுவரெலியாவில் தொடர்கிறது

நுவரெலியாப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க் கிழமை இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் போட்லூட் தோட்டத்தைச் சேர்ந்த வேணு ராஜேந்திரன் என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இதே வேளை கடந்தமாதம் 4ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட நுவரெலிய லவர் சிலிப்பைச் சேர்ந்த பெரிய தம்பி நவரட்ணம், ஹாவா எலியாவைச் சேர்ந்த மங்கய்பன் கணேசன், புகையிரத விடுதியைச் சேர்ந்த தர்மேந்திரா பிள்ளை கமலதாசன் ஆகியோர் பற்றி இதுவரை தகவல் ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 08

## கருத்தரங்கு

வடமராட்சி கிழக்குப்பகுதியிலும் வடமராட்சிப் பகுதியிலும் ''போர்க்காலக் கருத்தரங்குகள்'' நடாத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். 24, 10

## சட்டசபை இடைத்தேர்தலில் 65 வேட்பாளர்கள் போட்டி!

இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழக சட்டசபைக்கான இடைத் தேர்தலில் அறுபத்தைந்து பேர் போட்டியிடுகின்றனர்.

அதிகமானோர் சென்னை துறைமுகம் தொகுதியில் இங்கு இருபத்திரண்டு பேர் போட்டியிடுகின்றனர்.

அடுத்தபடியாக காங்கேஜன் தொகுதியில் இருபத்தொரு பேர் போட்டியிடுகின்றனர்.

காங்கேஜன் சென்னை துறைமுகம், முசுறு, எழும்பூர் தொகுதிகளிலேயே தேர்தல் நடைபெறவுள்ளது.

## 1500கோடி பெறுமதியானதங்கம் ஈராக் குவைத்திடம் வழங்கியது

1500 கோடி ரூபா பெறுமதியான 3216 தங்கப் பாளங்களைஈராக் நேற்று குவைத்துக்கு வழங்கியுள்ளது.

கடந்த வருடம் ஈராக் குவைத்தைக் கைப்பற்றிய சமயம் இந்தத் தங்கத்தை ஈராக் குவைத்திடமிருந்து அபகரித்திருந்தது.

ஐ நா. விசேட மேற்பார்வையின் கீழ் இக் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது.

## கல்முனை அகதிமுகாமில் தீ! ஐவர் பலி; 22 பேர் படுகாயம்

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி அகதிமுகாமில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டதில் ஐந்து பேர் ஸ்தலத்தில் எரிந்து கருகி மாண்டனர்; 22 பேர் படுகாயமுற்றனர்.

முகாமிலிருந்தே எட்டுக் குடிசைகளும் பாதிப்படைந்திருந்தன, பாதிக்கப்பட்டவர்களில் அநேகமானோர் சிறுவர் எனக் கூறப்படுகிறது. இத் தீவிபத்துக்கு நாசவேலையே காரணமாக இருக்குமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. 08

## லஞ்சம்பெற்று அனுமதிப்பத்திரம் வழங்கினராம் பிரிகேடியர், மேஜர், 15 இராணுவப் பொலிஸார் கைது

யாழ்ப்பாணத்தில் தடை செய்யப்பட்டுள்ள சில பொருள்களை அங்கு கடத்திச் செல்வதற்கு இலஞ்சம் பெற்று அனுமதிப்பத்திரம் வழங்கியதாக அனுராதபுரத்திலுள்ள இராணுவக் உயரதிகாரி பிரிகேடியர் பி.பண்டார மீது குற்றம் சாட்டப்பட்டு அவர் இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக இலஞ்ச ஆணையாளர் திணைக்களமும், விசேட இராணுவ குழுவும் விசாரணையை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை 15 இராணுவப் பொலிஸாரும் ஓர் தொண்டர்படை மேஜரும் வடபகுதிக்கு கடத்தல் பொருள்களை எடுத்துச் செல்ல இலஞ்சம் பெற்றார்களெனக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியில் பொறியியலாளர் ஒருவரும், சட்டத்தரணி ஒருவரும், தமிழரொருவரும் சம்பந்தப்பட்டுள்ளனரெனவும் கூறப்படுகிறது. 08

## இலங்கைக்கு மானியமாக ஜப்பான் 84 கோடி ரூபா உதவி

ஜப்பான் இலங்கைக்கு 83 கோடியே 70 லட்சம் ரூபாவை மானிய உதவியாக வழங்கியுள்ளது.

உணவு உற்பத்தி அதிகரிப்பு, நவீன வானொலிக் கலைக்கூடம் ஆகிய இரு திட்டங்களுக்கே ஜப்பான் இந்த மானிய உதவியை வழங்கியுள்ளது.

## ★ பாரிஸில் திலகர் தகவல்

# ஆனையிறவுப் போரில் 1500 சிப்பாய்கள் பலி!

ஆனையிறவுப் போரில் இராணுவத் தரப்பில் 1500 பேர் பலியாகியுள்ளதாக விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் பாரிஸில் தெரிவித்துள்ளார்.

நேற்று ஏஜன்ஸிச் செய்தி நிறுவனம் இத் தகவலைத் தெரிவித்தது.

இந்த மோதலில் 1500 புலிப் போராளிகள் மரணமானதாக இலங்கை அரசு அடிக்கடி தெரிவித்துவருவதை லோறன்ஸ் திலகர் மறுத்துள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது.

## மாவீரருக்குகோண்டாவிலில் மக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் ஆனையிறவில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த கவிதா ஹேலன் தேவநாயகம் இளவாலை, நிரேதாதிபச்செல்வி - சிவபாதம் திருமலை, சகுந்தலாமேரிஇமல்டா மரியதாஸ் பண்டத்தரிப்பு, தர்மிளா கௌரி - கனகு செல்வபுரம், உதயன் மு குமாரசாமி மண்டூர், கேதீஸ் சு.விஜயதாஸன் சுழிபுரம், நிசாந்தன் இ. பிரேம்சிறி நல்லூர், மதிவாணன் த. தனேஷ்வரன் சங்கானை, சுதா க. குணநாதன் மட்டக்களப்பு ஆகியோரின் புகழுடல்கள் நேற்று மக்களஞ்சலிக்காக கோண்டாவில் மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டது.

அஞ்சலிக்கூட்டத்தைத் தொடர்ந்து புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியன.

## விவசாயிகளுக்கு மீண்டும் கெயர் உதவித்திட்டம்

கெயர் நிறுவனத்தால் 15000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உதவித்திட்டம் ஆடி மாதத்துடன் முடிவடைந்துள்ளதாகவும் மேலும் 7500 விவசாயிகளுக்கு உதவி வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கெயர் நிறுவன உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

முன்னர் வழங்கப்பட்டதிட்டம் 80 வீதம் வெற்றியடைந்து உள்ளதாகவும் இம்முறைத்திட்டத்தில் 1875 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடுவதற்கு உதவி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

7500 விவசாயிகளுக்கான உதவித்திட்டம் ஐப்பசியில் ஆரம்பித்து அடுத்தவருடம் ஆடி மாதம் வரை நடைமுறைப்படுத்தப்படுமெனவும், விதைமண்ணெண்ணெய்உரம் நீரிறைக்கும் இயந்திரம் ஆகியன வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் மூலம் உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாதெனவும், அகதிகள் புனர்வாழ்வுத் கழகம், உலர் வலய அபிவிருத்தி மன்றம், கோப்பாய் நலன் காக்கும் பிரிவு ஆகியன மூலமே நடைமுறைப்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுளளது. 05

## தி. மு. க. உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுவதாகபுகார்

முன்னாள் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மற்றும் தி. மு. க. பிரமுகர்களின் தொலைபேசி உரையாடல்கள் அனைத்தும் ஒட்டுக் கேட்கப்படுவதாக திரு ஆலடி அருணா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தி. மு. க. உறுப்பினர் எவரும் உரையாடுவதை ஒட்டுக்கேட்கும் அதிகாரம் பொலிஸாருக்குத் தமிழக அரசு வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

### கல்வியமைச்சு நடவடிக்கை

## தனியார் பாடசாலைகளில் மாணவர்களுக்கு புதியகட்டணம்

தனியார் பாடசாலைகளில் மாணவர்களிடம் கட்டணம் அறவிடுவது குறித்து புதிய கட்டண முறையை ஏற்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

இந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கல்வியமைச்சு சம்பளம் வழங்கி வருகின்ற போதிலும் சில தனியார் பாடசாலைகளில் மாணவர்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு வருவதாகக் கல்வியமைச்சுக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள தனியார் கலலூரி ஒன்று வருடாந்தம் முப்பது ரூபா வினால் கட்டணத்தை அதிகரித்துள்ளது,

கட்டணத்தைத் திடீரென அதிகரிப்பதால் பல மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவில் கைவிடவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 08

## வாகன விபத்தில் மரணம்

நேற்றுக்காலை கச்சேரி நல்லூர் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் திரு. செல்வரத்தினம் (57) மரணமானார்.

இவ்விபத்தில் வாகனச்சாரதி உட்பட இன்னுமொருவர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 25

## சவர்க்காரத்திற்கு கியூ

நீண்ட நாள்களுக்குப் பின் யாழ் நகரில் நீண்ட கியூ வரிசையைக்காண முடிந்தது. இந்தக் கியூ வரிசை இப்போது பெரும் தட்டுப்பாட்டில் இருக்கும் சவர்க்காரத்தைப் பெறுவதற்காகவே நின்றது. இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண அட்டைக்கு கட்டுப்பாட்டு விலையில் அட்டைக்கு இரண்டு சவர்க்காரங்கள் வழங்கப்பட்டன. 03

### மோதல்கள்...

அமைச்சின் செயலர் சிறில் ரணதுங்க குறிப்பிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

### காயமடைந்த...

கருதி முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு சிறிய முகாம்கள் படையினரால் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு வரையும் படையினர் உள்ளதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

### ஆனையிறவுப்...

முடியாது என புலிகள் வட்டாரங்கள் கூறியதாகப் பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

## யாழ் மாநகர புனரமைப்பை நிறுத்த மாகாணசபை பணிப்பு

யாழ் மாநகரசபையின் புனருத்தாரண புனரமைப்புப் பணிகளை உடனடியாக நிறுத்திவைக்குமாறு வடகிழக்கு மாகாணசபை யாழ் மாநகர சபைக்கு அறிவித்துள்ளது.

மாநகரசபைப் பகுதியில் சேதமடைந்த கட்டிடங்களை திருத்தியமைப்பது குறித்து வடகிழக்கு மாகாணசபைக்கு யாழ் மாநகரசபை தெரிவித்திருந்தது.

ஆனால் இதற்கு பணம் எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் மாகாணசபையின் இந்தஅறிவிப்புக்கிடைத்துள்ளபோதிலும் யாழ் மாநகரப் பகுதியில் புனரமைப்பு வேலைகள் நடைபெறவேண்டிய அவசியம் குறித்து ஆணையாளர் மாகாண சபைக்கு விளக்கிக் கூறியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன 02

### தீக்குளிப்பு

நல்லூர் கந்தர்மடம் அரசடி வீதியிலுள்ள வயிரவர் கோயிலில் வெற்றி வேண்டி காலை பிரார்த்தனையும் மாலை 4 மணிக்கு தீக்குளிப்பு வைபவமும் இடம்பெறும், 06

## நாளை கப்பல் பயணம்

நாளை புதன்கிழமை பருத்தித்துறையிலிருந்து 'குமணா' கப்பல் கடும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு செல்லுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தபால் பொதிகளும் கொண்டு செல்லப்படவுள்ளன. இதனால் இன்று நண்பகலுக்கு முன்னர் வெளியிடங்களுக்கான தபால்களை யாழ் பிரதம தபாலகத்தில் போடும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. 01

### ஜெயலலிதாவின்...

ளப்பட்டன. இந்தக் குடிசைகளில் ஏழை மக்கள் வாழ்ந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு சென்னை நகருக்கு வெளியே ஆலந்தூரில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதாவின் இல்லத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாவலர்கள் தங்குவதற்கு புதிய தங்குமடம் கட்டப்பட்டு வருகின்றது.

### இன்பனுக்கு...

அலுவலகத்திலும், பின்னர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டமும் இடம் பெற்றது.

தொடர்ந்து இம் மாவீரனின் புகழுடல் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது. 42

### ஆனையிறவு..

தலை நடாத்தினர்.

இதனால் சிலகாவலரண்கள் அழிந்தன. அங்கிருந்த படையினர் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. புல்லாவெளிப்பகுதியில் கடும் விமானத் தாக்குதலின் மத்தியில் புலிகள் இக்காவலரண்கள் மீது தாக்குதல் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. இம்மோதலில் புலிகள் தரப்பில் 21 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று மாலை மீண்டும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் உக்கிரமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

பிந்திக்கிடைத்த தகவல் ஒன்றின்படி நேற்றுக் காலை முதல் குறிஞ்சாத்தீவு மற்றும் ஆனையிறவு தடைமுகாமின் சூழவுள்ள பகுதி ஆகிய இடங்களில் மோதல்கள் வெடித்துள்ளன. 07

## பாடசாலை மாணவருக்கு போரூட் நிறுவனம் உதவி

காரைநகர், சுழிபுரம், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்புக் கொத்தணிகளுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சுழிபுரத்திலுள்ள போரூட் ஸ்தாபனத்தினர் சகாய விலையில் பாடசாலைப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

பல தரப்பட்ட கொப்பிகள், பேனாக்கள், சீருடைக்கான துணிவகைகள் முதலான பாடசாலைப் பொருள்கள் பலவற்றை சகாய விலையில் அவ்வப்பாடசாலை அதிபர்களுக்கூடாக வழங்கி வருகின்றனர் 18

## இலவச நிவாரண உதவி இவர்களுக்கு இல்லை

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிபுற்ற அரச ஊழியர்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை எனப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள எட்டு கிராம சேவகர் பிரிவுகளில் இருந்தும் அரச; ஓய்வுதியக்காரர்கள் தங்கள் தங்கள் விடு வசால் சொத்துக்களை இழந்து ஏனைய இடங்களில் வசித்து வருகின்றார்கள்.

## அத்வானியைக் கொல்ல பங்களாதேஷில் முயற்சி

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானியைக்கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக இந்தியப்பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை நடாத்துகின்றனர்

இவரைக்கொலை செய்ய பங்களாதேஷில் சதி நடந்ததாக வெளியான தகவல்களை பங்களாதேஷ் பிரதமர் மறுத்துள்ளார்.

அந்நிய நாட்டுக்கு எதிராக பங்களாதேஷில் எவரும் சதி போன்றவற்றில் ஈடுபட பங்களாதேஷ் அரசு அனுமதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போக்குவரத்து ஊழியர்களுக்கு 6 மாதமாக ஊதியம் இல்லை

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு கடந்த ஆறு மாதங்களாக ஊதியம் வங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து அவ்வூழியர்கள் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தும் எதுவும் பலனளிக்கவில்லை.

அமைய ஊழியருக்குகடந்த ஒருவருடகாலமாக உதவிப் பணமோ ஊதியமோ வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, 18

## ஊன்று கோலை வழங்கக் கோரிக்கை

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவரும் புனர்வாழ்வுப் பிரிவினர் வைத்திய உதவியாக வழங்கப்பட்ட ஊன்றுகோல்களை மீளத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளனர்

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் பலர் ஊனமுற்றவர்களாகவும் பாதிப்புற்றவர்களாகவும் தினமும் மேற்படி புனர்வாழ்வுப் பிரிவிற்கு வந்த வண்ணமுள்ளார்கள்

இவ்வூன்றுகோல்கள் இன்மையால் இவர்கள் மேலும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

எனவே இவர்களுக்கு உதவும் முகமாக எம்மிடம் தற்காலிக உதவியாகப் பெற்றுச்சென்ற ஊன்றுகோல்களை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, 09

### பிரான்ஸில்...

நிலையத்தில் கலாட்டா செய்தார். இதனால் அவ்விமானத்தின் விமானியும் விமானத்தை எடுத்துச் செல்ல விரும்பவில்லை.

நீண்ட தாமதத்தின் பின் அப்பெண் விமானத்திலிருந்து இறக்கப்பட்டு பாரிஸ் ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டார்.

இவரை பராமரிக்கும் செலவை அவரை ஏற்றிவந்த விமானக் கம்பனியே ஏற்றுள்ளது. 08

## குடாநாட்டில் மழை பெய்ததும் வயல் வேலை

யாழ் குடாநாட்டில் நேற்றுப் பரவலாக மழை பெய்ததைதயடுத்து விவசாயிகள் வயல்களை பண்படுத்தும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர். 18

### சில...

சபைத்தேர்தலில் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இப்புகார்களை விசாரிப்பதற்கு ஒழுங்கு நடவடிக்கைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. 08

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 06.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.